# 75th Anniversary
## of the
## Grotto of Lourdes - Kayts



**1936 – 2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O MOST HOLY VIRGIN,

*Do not - in the midst of thy greatness - forget our earthly sorrows. Cast down thy tender look upon those who suffer, who struggle against difficulties, and who cease not wetting their lips in the bitter draughts of this life. Have pity - I beseech thee - on those who, although united in love, have been cruelly parted, and take pity on the lonely- hearted. Grant us thy help in our unbelief, and have compassion on theose most dear to us.*

*Compassionate those who mourn, who pray, who tremble, and grant all Hope and Peace.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# *Message from the Bishop of Jaffna, on the 75th Anniversary of the Kayts, GROTTO.*

*Our Lady of Lourdes appeared, in the year 1858 February 11,in the pyreness mountainious region in Southern France, to a little girl called Bernadette Soubirous. Our Lady of Lourdes asked Bernadette to build a Chapel at the site of the apparition.*

*Years later, in the year 1935, My Father, Emmanuel Varapragasam, was inspired to erect a Grotto,in honor of Our Lady of Lourdes, as a gratitude,for a special favor bestowed on them. After consulting the then Parish Priest.with his permision he built the Grotto at the Church premises and named their First child Lourdes.This year is the 75th Anniversary of this Grotto at Kayts.*

*On the occasion of my Episcopal Silver Jubilee, my Sister Anna Lourdes Thampoe, presented a blessed stone from the shrine of Lourdes France and this was blessed and placed in the Grotto.*

*I too humbly join my Sister's Family and all the devotees to thank Our Lady of Lourdes for the innumerable favors granted to all of us,through Her powerful intercession.*

*AVE MARIS STELLA,*
*DEI MATER ALMA,*
*ATQUE SEMPER VIRGO*
*FELIX CAELI PORTA.*
*AVE, AVE, AVE, MARIA.*

*Rt.Rev.Dr.E.Thomas Savundaranayagam*
*Bishop of Jaffna*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே உன் பாதமே நாடினோம்.
# தஞ்சமென வேண்டினோம்.



மரியியல் அறிஞர்களும் மரியன்னையின் பக்தர்களும் மரியாளுக்கு பல சிறப்புப் பெயர்களை சூட்டி பாராட்டுகின்றார்கள், வியந்து போகின்றார்கள். அத்தகைய பெயர்களில் சில கன்னிமரி காட்சி தந்த இடங்களோடு தொடர்புடையவை. அவை லூர்து அன்னை, வேளாங்கன்னி அன்னை, மற்றும் சில மரியாவின் வாழ்வின் நிகழ்ச்சிகளோடு தொடர்புபட்டவை. அவை காணிக்கை மாதா, வியாகுல மாதா போன்றவை. வேறுசில இறையியல் சிந்தனையில் பிறந்த பெயர்கள். அவை சீயோன் மகள், கன்னி மரியா நற்கருணையின் பெண்மணி என்பவையாகும்.

இவற்றில் அகில உலக ரீதியாக உச்சரிக்கப்படும் பெயர்களில் லூர்து அன்னையின் நாமமும் ஒன்றாகும். உலகமயமாகும் நவீன உலகில் இன்றும் பக்தர்கள் லூர்துகெபிக்கு படையெடுப்பது அந்தோனியார் ஆலயத்தில் அமைந்திருக்கும் லூர்து அன்னையின் கெபியும் பல பக்தர்களை மதவேறுபாடின்றி ஈர்ந்திருப்பதை சிறுவயதிலிருந்தே மண்ணின் மைந்தன் என்ற வகையில் கண்டு வியப்படைந்துள்ளேன். சிறுவயதிலிருந்தே என் பெற்றோருடன் இப்பதிக்கு பல தடவை தரிசித்து அன்னையின் அருள் வளங்கட்காக வேண்டி செபித்துள்ளேன். அவளின் பாதம் நாடி தஞ்சம் வேண்டியோர்க்கு அன்னை பாராமுகமாக இருந்ததேயில்லை.

கடந்த 75 ஆண்டுகளாக காவலூர் பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அன்னைக்கு, அவளின் பரிந்துரைக்கு நன்றி கூறுவோம். போரின் வடுக்களையும் இயற்கையின் தாக்கங்களையும் சுமக்கும் எம்மவர்க்கு லூர்து அன்னையின் பரிந்துரை, இன்னும் அதிகமாக கிடைக்க வேண்டியுள்ளது. எனவே லூர்து அன்னையின் தவம் செய்து நம்பிக்கையோடு செபிப்போம்.

லூர்து அன்னையின் பரிந்துரை என்றும் கிடைக்க வேண்டுகின்றேன்.

அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம்
குரு முதல்வர்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே வாழ்க – உன் புகழ் எங்கும் பரவட்டும்



இலங்கைத் திருச்சபையின் வரலாற்றில் இவ்வாண்டு முக்கியமானதொரு ஆண்டாக அமைகின்றதற்கு முக்கிய காரணம் அருளாளர் யோசப்வாஸ் முனிவரின் விண்ணகப் பிறப்பின் முந்நூறாவது ஆண்டாகும். யோசப்வாஸ் அடிகளாரும் அவரைத் தொடர்ந்த மறைபோதக அடியார்களும் மரியன்னைப் பக்தியை இலங்கையில் ஆழமாக வேரூன்ற உழைத்தனர். அதன் விளைவாகவே இலங்கைத் தீவில் பல ஆலயங்கள் மாதாவின் வெவ்வேறு பெயர்களில் அர்ப்பணிக்கப்பட்டு மாதா பக்தி எல்லாவிடங்களிலும், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மத்தியில் பிரயல்யமாக இருக்கின்றது. இவ்மரியாள் பக்தியை வளர்ப்பதில் காவலூர் புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் அமைந்திருக்கும் லூர்துகெபியும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இவ்லூர்து கெபியானது காவலூரைச் சேர்ந்த கிறிஸ்தவர் திரு. வ.இம்மானுவேல் என்பவர் தன் குடும்பத்திற்கு தேவதாயாரின் பரிந்துரையால் குழந்தைச் செல்வம் கிடைத்ததன் இம்மானுவேலின் குடும்பத்திற்கு மட்டுமல்ல, லூர்து அன்னையின் பரிந்துரையால் பலர் அருள்வளங்களைப் பெற்றுள்ளனர் என்பது காணக்கூடியதாகவுள்ளது.

லூர்து அன்னையின் பரிந்துரையால் மக்கள் பெற்ற அருள் வளங்களின் 75 ஆண்டுகளின் நிறைவாகவே இவ்வருட விழா அமைகின்றது. அன்னையின் பரிந்துரைகட்கு விசேஷ விதமாக நன்றி நவில்வோம்.

புதிய பங்குத் தந்தையாக பொறுப்பேற்றிருக்கும் நான் இவ் 75ம் ஆண்டின் நிறைவில் இறைமக்களோடு சேர்ந்து நன்றி நவில்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அன்னை காட்சியளித்த போது செபமும், தபமும் செய்யுங்கள் என்று கூறிய அருள் வார்த்தைகளை நினைவு கூறுவோம். போரினால் அனைத்தையும் இழந்து நிற்கும் எம் மண்ணிற்கு, எம்மக்கட்கு அமைதியும் நிறைவான வாழ்வும் கிடைக்க செபமும் தபமும் எம் வாழ்விலும் தாரக மந்திரமாக அமையட்டும். அண்மையில் இயற்கையின் சீற்றத்திற்கு உள்ளாகியிருக்கும் மக்கட்காக செபம், தபம், தானம் செய்து லூர்து அன்னையின் பரிந்துரைக்காக அனைவரும் வேண்டுவோம்.

லூர்து அன்னையின் அருள் உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நிறைவாகிட அருள் வேண்டி ஆசிகூறி நிற்பது.

அருட்பணி. கி.ஜோ. ஜெயக்குமார்,
பங்குத் தந்தை,
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



உள்ளங்கனிந்து உவகையோடு கேட்கும் பக்தர்களுக்கு வரங்களை அள்ளித்தரும் எம் அன்னையாம் லூர்து அன்னையின் பெருவிழாவை ஊர்காவற்றுறை பங்கு மக்கள் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். லூர்து அன்னையின் திருநாள் வாழ்த்துக்களை பங்குத் தந்தை அருட்திரு C.G. ஜெயக்குமார் அடிகளாருக்கும் பங்கு மக்களுக்கும் அன்போடு கூறி நிற்கின்றேன்.

உலகமெங்கும் வாழ்கின்ற கத்தோலிக்க மக்கள் அன்னை மரியாளுக்கு தனிச்சிறப்பிடம் கொடுத்து வருகின்றார்கள். ஏனெனில் " நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே ஆகட்டும்" என்று தன்னை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்து இறைமகனாம் இயேசுவைக் கருத்தாங்கி பெற்றெடுத்தாள் எம் அன்னை. எனவே, இவ் அன்னை உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுலகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள். விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டாள். இப்படிப்பட்ட சிறப்புக்களை பெற்ற அன்னை மரியாள் லூர்து நகரில் காட்சி கொடுத்த நாளை உலகம் முழுவதும் கொண்டாடினாலும், எமது பங்கில் புனித அந்தோனியார் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற லூர்து அன்னையின் கெபியில் பெருவிழா கொண்டாடுதென்பது பங்கு மக்களுக்கு கிடைக்கின்ற ஓர் அற்புதமான கொடையும் ஆசீர்வாதமுமாகும்.

இவ்வாண்டு, இக்கெபி கட்டப்பட்ட 75ஆவது வருடத்தை நினைவு கூர்கின்ற "பவள விழா" ஆண்டாகும். மேலும் இம் மண்ணிலே பிறந்து இறைவனுக்கு தன்னை முற்றுமுழுதாய் அர்ப்பணித்து, எமது மறைமாவட்டத்தின் ஆயராக பணியாற்றும் அதி. வணக்கத்துக்குரிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் பெற்றோரால் இக்கெபி அமைக்கப்பட்டது என்பது, அவர்களின் ஆழமான விசுவாசத்தையும், அன்னை மீதுள்ள அன்பையும் நாம் என்றும் பெருமிதத்துடன் நினைவு கூறத்தக்கதாகும்.

இறையாசீரும் லூர்து அன்னையின் பரிந்துரைகளும் இவரோடும் இக்குடும்பத்தோடும் மற்றும் அன்னையை நாடிவரும் பங்குமக்கள் பக்தர்கள் அனைவரோடும் இருப்பதாக.

வணபிதா.க.ஜேம்ஸ் சிங்கராயர்,
அதிபர்,
புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானே அமல உறபவம்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் இருக்கின்ற காவலூருக்கு தனிச்சிறப்பு உண்டு. இதன் நுழைவாயிலே இருக்கின்ற புனித அந்தோனியார் ஆலயமும் கல்லூரியும் உள்நுழைவோரை வரவேற்கும் வாழை மரமாக இருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருக்கின்றது.

விசுவாசத்தின் விளைநிலமென்று பெயர் பெற்ற காவலூரின் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வருகின்ற மக்களில் கூடுதலானவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் எல்லோரும் இதன் அருகில் இருக்கின்ற லூர்து அன்னையிடம் ஆறுதல் பெற்று செல்வத்தை நாமறிவோம். சிறப்பாக அல்லைப்பிட்டி இடம்பெயர்வின் போது அலை அலையாக வந்த மக்கள் அன்னையின் பாதத்தில் மண்டியிட்டு தாயன்பின் ஆறுதலைப் பெற்றதை ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை ஏற்றுக் கொண்டதை நாம் அனுபவித்திருக்கிறோம். தனிமையில் இருந்து அன்னையிடம் ஆறுதல் பெறுவதற்குரிய சூழல், சூழ்ந்த அமைதி உண்டு. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் திருப்பலி முடிவடைந்ததும் அனைவரும் அன்னையின் பாதத்தில் அமர்ந்து ஒரு காரணிக்கம் ஓதி அன்னையின் புகழ் பாடிச் செல்வோம். தனது பெயரை " நானே அமல உற்பவம;" என்று அறிவித்த அன்னை லூர்து நகரில் காட்சி கொடுத்த போது பாவிகளுக்காக செப தபம் செய்யுங்கள் என்று கூறிய வார்த்தைகளையே நமக்கும் கூறுகின்றாள். தாயிலும் மேலாக எமை அனைத்து இந்தப் பதியிலே இற்றைக்கு 75 ஆண்டுகளாக அருள்பாலிக்கும் அன்னைக்கு நன்றி கூறுவோம். தொடர்ந்தும் இந்த மண்ணிலே விசுவாசம் விருட்சமாக வளர குடும்பங்கள் சிறக்க குழந்தைகள் வாழ்க்கையில் உயர வாழ்த்தி அன்னையின் ஆசீரை வேண்டி நிற்கின்றேன்.

சகோதரி. எலிசபெத்,
அதிபர்,
யாழ்; ஊர் புனித மரியாள் றோக பெண்கள் வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையில் அமைந்திருக்கும் புனித லூர்து அன்னை கெபியின் 75வது வருட ஆண்டின் நிறைவிழா

இலங்கைத்தீவானது மரியன்னையின் பக்தியில் சிறந்து விளக்கும் கத்தோலிக்க நாடாகும். அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரும் அவரைத் தொடர்ந்துவந்த வேதபோதக குருக்களும், தமது நற்செய்தி பணியில் மரியன்னை பக்தியை ஓங்கச் செய்தனர். இன்று நகரம்தோறும், கிராமங்கள்தோறும் மரியன்னை பெயரால் பெரியவை சிறியவையாக ஆலயங்கள் காட்சியளித்துள்ளன. இப்பக்தியை வளர்ப்பதில் லூர்து அன்னை காட்சி கொடுத்த கெபிகளும் உதவியளிக்கின்றன. இவ்விதம் அமைந்தது தான் 75 வருடங்களின் முன் கட்டப்பட்ட புனித அந்தோனியார் ஆலய வளவில் அமைந்துள்ள லூர்து அன்னையின் கெபியாகும்.



தந்தை வரப்பிரகாசம் இம்மானுவல், தாய் சவிரியாச்சி,
மகன் வண. தோமஸ் சவுந்தரநாயகம் அவருடைய
குருபட்டத்தின் பொழுது கெபியின் முன்பாக

இக் கெபியானது 1936ம் வருடத்தில் பங்குத்தந்தையாக இருந்த வண.பிதா ஆசீர்வாதம் அடிகளின் அனுமதியுடன் எனது தந்தையாகிய திரு. வரப்பிரகாசம் இம்மானுவேல் அவர்களால் கட்டுவிக்கப்பட்டது. இதை கட்ட முயன்றபோது அதற்கு ஏற்ற கட்டட அமைப்பினர் கிடைக்கவில்லை. எனவே ஒரு இந்து சமயத்தை சார்ந்த கட்டட அமைப்பாளரின் உதவியைப் பெற்று எனது தந்தையின் ஆலோசனைக்கு இணங்க இக்கெபி அமைக்கப்பட்டது. அப்போது 2000/- செலவிலேயே இந்த கெபி முற்றாக அமைக்கப்பட்டது. அப்பொழுது இளைஞனாக இருந்த இவ் அலுவல்களை மேற்பார்வை செய்த எனது உறவினர் எஸ்.அந்தோனிப்பிள்ளை இன்னும் எம்மோடு உள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் 11ம் திகதி இத்திருநாள் வெகு சிறப்பாக எனது தந்தையினால் அனுசரிக்கப்பட்டது. கெபித் திருநாள் என்றால் எங்கள் வீட்டில் ஒரே குதூகலம். கொழும்பு துறைமுகத்தில் தொழில் புரிந்த எனது தந்தை கட்டாயம் திருநாளுக்கு முன்பே வந்து தேவையான ஆயத்தங்களை எல்லாம் கவனித்து பங்குத் தந்தையுடன் ஆலோசித்து அனைத்தையும் சுமுகமாக செய்து முடிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மாமனாகிய அந்தோனிமுத்து விதானயாரும் இத்திருநாளை கொண்டாடுவதில் தீவிரமாக ஈடுபடுவார். வீடுகளில் இருக்கும் திறமான கப்பல் கொடிகள் எல்லாம் கெப பயையும் அதன் முன்றலையும் அலங்கரிக்கும். மாலை ஆராதனைகள் சிறப்பாக இருக்கும். (vesper) மாலை ஆராதனையின்போது அயல் பங்கு குருக்களும் வருகை தந்து சிறப்பிப்பார்கள். விதானையார் மாமா வண்டில் கட்டி சாட்டி பகுதிக்கு சென்று "தாளம்பூ" மரக்கிளைகளையும் ஏனைய படர் கொடிகளையும் கொண்டு வந்து கெபி முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் தாளைமரத்துக்கள் தாளம் பழங்கள் மஞ்சள், சிவப்பு நிறத்துடன் காட்சியளிக்கும். அவரிடம் ஒரு பழைய மின் பிறப்பாக்கி இருந்தது. அக்காலத்திலே நவீன மான இவ்வியந்திரத்தை கொண்டு வந்து திற திறமான மின்சார விளக்குகளை பொருத்தி கெபி முழுவதும் அழகுபடுத்துவர். இவ் மின்சார பிறப்பாக்கியை இயக்குவதற்கு யாழ்ப்பானத்தில் இருந்து பெரேரா என்று அழைக்கப்பட்ட மெக்கானிக்கை கூட்டி வருவார்.



கெபித்திருநாள் 2010

மாலை ஆராதனையின் போது பங்குத்தந்தை கெபியின் கிராதியின் நின்று மறைஉரை ஆற்றுவார். இவ்விதமாக அருட்திரு பிலிப் பொன்னையா அவர்கள் மறையுரை ஆற்றியது இன்றும் என் கண்ணுக்கு முன் நிற்கின்றது. தான் லூர்து பதிக்கு சென்றதாகவும் அங்கு நடந்த திருவிழாவில் கலந்து கொண்டதாகவும் அங்குள்ள அற்புதமான நீரூற்றில் ஒருமுறை குளித்ததாகவும் அதன் பயனாக தனது முள்ளந்தண்டில் இருந்த நோவு அற்புதமாக மறைந்ததாகவும் சிறப்பான உரையாற்றி லூர்து அன்னையின் மகிமையை மக்களுக்கு எடுத்துக் கூறினார். மாலை வேளையில் நந்கருணை ஆராதனையின் பின் லூர்து அன்னையின் மகிமையாக மக்களுக்கு எடுத்துக் கூறினார். மாலை வேளையில் நற்கருணை ஆராதனையின் பின் லூர்து அன்னையின் சுரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்படும். மக்கள் மெழுகுவர்த்தியை ஏற்றிய விளக்குகளை கையில் ஏந்தி இப்பவணியில் கலந்து கொண்டனர். இவ்விதம் கெபித் திருநாள் அன்னதானத்துடன் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. அவ்வாறு தீவகத்தில் கரம்பன், நாராந்தனை ஆகிய இடங்களிலும் லூர்து அன்னையின் கெபிகள் உருவாக்கப்பட்டு அன்னையின் மகிமை பறைசாற்றப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 30 வருடங்களாக போர்க்கால சூழலினால் திருநாட்கள் ஒழுங்காக நடைபெறறாமலும் மக்கள் அங்கிருந்து வெளியேறி இடம்பெயர்ந்து கொழும்புக்கும், அயல் நாடுகளுக்கும் சென்றதனால் கெபி திருநாள் தனது பழைய சோபையை இழந்து இருந்தது. ஆனால் சமீபகாலத்தில் இத்திருநாளை ஆர்வத்துடன் கொண்டாட காவலூர் மக்கள் திரண்டு மரியன்னையை மகிமைப்படுத்த ஒன்று கூடுகின்றனர்.

லூர்து கெபியின் 75 வருட நிறைவை கொண்டாடும் இவ்வேளையில் அங்கு பணியாற்றிய குருக்கள் துறவிகள், அருட்சகோதரர்கள் அருட்சகோதரிகள் பாடசாலை அதிபர்கள் இவர்களை நன்றியோடு நினைவு கூறுகின்றோம். இக்கெபி ஆரம்பமாவதற்கு காரணகர்த்தாவாக இருந்த திரு வரப்பிரகாசம் இம்மானுவேல் தம்பதியினர் இன்று உயிரோடு இல்லாவிட்டாலும் அவர்களது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் அந்தோனியார் ஆலய மக்களுடன் ஒன்று சேர்ந்து லூர்து அன்னையின் விழாவை சிறப்பாக கொண்டாடி மரியன்னை வழியாக தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைக்கு நன்றி கூறி அவள் புகழ் பரப்ப செயல்படுகின்றனர்.

தகவல்
மேதகு.இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்,
ஆயர் இல்லம்,யாழ்ப்பாணம்.
26.01.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kayts Grotto of Lourdes
# 75 years.



*The Grotto in Lourdes celebrated 150 years in the year 2008, while the Grotto of our Lady of Lourdes at Kayts celebrates,it's 75th Anniversary in 2011. In Feb 1858, in the Grotto at Massabielle near Lourdes in Southern France, Blessed Virgin Mary, appeared 18 times, to a barely literate 14 years old peasant girl named Bernadette Subirous. Mary revealed herself as the ' Immaculate Conception ' asked that a Chapel be built on the sight of the vision and told the girl to drink from the small spring in the Grotto.*

*Lourdes have now become one of the most famous Shrines where healing continues for all who seek graces through the Blessed Mary Immaculate's intercession.*

*TheGrotto of our Lady of Lourdes at Kayts with the inscription " I am the Immaculate Conception " (worded in Tamil) above the statue was built in the year 1936 by Mr & Mrs.Varapragasam Emmanuel, as an act of thanksgiving to our Lady,for answering their humble petition for the gift of a Baby.*

*The history goes that Emmanuel and his wife Saviriachi did not have children for the 10 years of their married life. The 3 pregnancies ended up with still born babies one after the other. They were distressed and dishaertened over this. Seeing their situation the Parish Priest of that time Rev.Fr.Asservatham OMI, asked them to pray to our Lady of Lourdes and make a vow to honor Her name.*

*As an answer to their constant prayer,in due time a baby girl was born alive. There was no limit for the joy and excitement they felt, they named the child Lourdes.They realized the best way to give tribute and testimony is to build a Grotto to spread the devotion to Mary to make known to the people the maternal comforting touch of the Blessed Mother and the mercy and goodness of God Our Father.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*They did not have a blue print for the construction of the Grotto, with the help of the Priest they found a mason from Jaffna who was a Hindu, explained to him how it should be done and this is how the Grotto of our Blessed Mother was constructed.*



Lourdes With her Parents and Family

*Annually in February Mr.Emmanuel who was the Captain in the Marine section of the Shell company in Colombo, came to Kayts to celebrate the feast. All the relatives,the elders of the Church namely Messrs. Anthonysamy, Assaimutthu, Nadjestram, Udaiyar Rajam,and the youth of the area enthusiastically joined and gave a helping hand to make it special and meaningful. Mrs. Saviriachchi's cousin Kayts Vidane Mr. Anthonymuttu was also in the forefront ready with the generator to illuminate the Grotto. At that time there was no electricity at Kayts, It is after the early fifties the commercial generators were hired.*



with relatives Celebrating the feast

*The youngsters took a very active share in the cultural style of decorations, bringing coconut palms, bunches of coconuts, bananas with banana plants,wild thalai plants with red fruits that glows. Fresh flowers from the Hill county also adorned the Altar. In the early days,the feast started with the hoisting of the flag of our Lady of Lourdes,seven days novena,daily rosary, litany of Lourdes and Benediction, culminated with the Vespers sung by 3 Priests and the candle light procession in which decorated statue was carried by young girls dressed in white. ( there was a belief that many of the girls get married before the next feast)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Casa-De-Lourdes

*The next day Sunday is the festive mass. people from all parts of Kayts,come to participate in these celebrations. During the day, buns are distributed the Women get-together in the Church premises and prepare milk rice to distribute to the needy.*

*Mr & Mrs Emmanuel were also blessed with 2 more children, a Son & a Daughter. They built a new house and named it "Casa-De-Lourdes" The Son Thomas entered the minor seminary at the age of 14 and he is the present Bishop of Jaffna, Most Rev. Dr. Thomas Savundranayagam the Daughter Antonia Indra after her High School studies at Little Flower Convent, Karampon, proceeded to Holy Cross College, Trichy, Induia for Higher education and obtained the B.Sc. When she came back home, she and her Mother went on a pilgrimage to Madhu Shrine and whilereturning from Madhu both Mother & Daughter died together in the tragic train derailment at Mirigama in October 1964.Emmanuel was heartbroken but accepted it as God's plan and lived in Colombo with his miracle child Anna Lourdes,who was married to Mr.Bonjean Thampoe.*



Mother Savriachi
& Daughter Antonia Indra

*He continued to go to Kayts with the Daughter's family to celebrate the feast. Anna Lourdes was blessed with 5 children. They were all fond of the Grand Pa Emmanuel and looked forward to go annually to celebrate the feast of Lourdes.The first 2 children of Lourdes and Bonjean are named Immac and Conceptine respectively and the first Grandchild is named Lourdina.After Mr.Emmanuel's demise,his Daughter Anna Lourdes and her Husband Bonjean continued to take the Children to Kayts to celebrate the Grotto feast.*



Anna Lourdes & Bonjean
Thampoe their children

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



In Lourdes

*When the children grew up they left for higher studies to U.S.A.All the children are married, 4 of them are settled in U.S.A. The daughter Conceptine lives with her husband Dudley and children in Colombo, Lourdes & Bonjean are also living in U.S.A. Again thanks to our Lady of Lourdes they are blessed with 10 Grandchildren.They celebrated their Golden Wedding Anniversary in 2008, and visited Lourdes for the 150 years celebration.*

*The Grotto of Lourdes in Kayts has been part and parcel of the life of the people there. Many named their children after our Lady of Lourdes and prayed to her for physical and spiritual needs.Lourdes is the message for our times, for every time and a timeless message for one and all.*

*May the powerful intercession of our Lady of Lourdes,bring love, peace.healing and unity to all who implore Her Maternal aid.*

*" LOVE THE BLESSED VIRGIN AND PRAY,FOR HER TO PROTECT YOU."*
*BERNADETTE. MAY,12, 1873.*



Anna Lourdes feeding the cake to
her Brother Bishop on his Episcopal Anniversary

*Thank You, dear blessed Mother of our Lady of Lourdes for the countless blessings continuously bestowed upon my Brother Bishop, my family,Children & Grand-children. Thank you for keeping me alive to participate in the 75th Anniversary of the Grotto.*

*Mrs, Anna Lourdes Thampoe.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Bernadette's Account of the First Apparition*



*" I went to the banks of the Gave to gather wood with two other little girls. They crossed the water and started to cry. When I asked them why they were crying, they said that the water was cold. I asked them to help me throw stones in the water so that I could cross without taking my clogs off; they said I would have to do as they had done. So I went a little way further on the see if I could find a place to cross without getting my feet wet. I could not. So I came back in front of the grotto. Just as I started to take my clogs off, I heard a rustling sound. I looked towards the meadow; I could see that the trees were not moving at all. I turned back to my clogs. Again I heard the rustling sound. This time I raised my head and looked towards the grotto. I saw a Lady dressed in white; she had a white robe with a blue belt and a yellow rose on each foot, the same colour as the chain of her rosary.*

*When I saw her, I rubbed my eyes; I thought I must be mistaken. I put my hand in my pocket to find my rosary. I wanted to make the sign of the cross but I could not lift my hand to my forehead: it fell back down. The Vision made the sign of the cross. Then my hand trembled; I tried again to make the sign and this time managed to. I went through my rosary; the Vision ran her own beads through her fingers, but did not move her lips. When I had finished my rosary, the Vision suddenly disappeared. I asked the other two girls if they had seen anything; they said they had not."*

*Written on May 28th, 1861*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை புனித லூர்து கெபியின் 75 வருட ஆண்டு நிறைவையொட்டி திருமதி அன்னா லூட்ஸ் தம்பு அவர்களின் செய்தி

பிறான்ஸ் நாட்டில் லூர்து நகரில் உள்ள கெபியானது 2008ம் ஆண்டு அன்னை மரியாள் அங்கு காட்சி கொடுத்த 150 ஆவது வருட நிறைவை கொண்டாடியவேளை இன்று 2011ம் ஆண்டு ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள லூர்து அன்னையின் கெபியானது தனது 75 ஆவது வருட நிறைவை கொண்டாடி மகிழ்கின்றது.

பிறான்ஸ் நாட்டின் தென்பகுதியில் லூர்து நகரம் அமைந்துள்ளது. இந் நகரத்தின் மசாப்பியவே என்னும் இடத்தில் அமைந்துள்ள ஓர் கெபியில் 1858ம் ஆண்டு மாசி மாதம் 14 வயது நிரம்பிய தோட்ட வேலை செய்கின்ற வர்க்கத்தில் உருவான பெணடேற் கபிறவுஸ் என்ற சிறுமிக்கு 18 தடவைகள் அன்னை மரியாள் காட்சி கொடுத்தாள். அன்னை மரியாள் அந்த காட்சிகளில் தாமே " அமல உற்பவம்" என கூறி தான் காட்சி கொடுத்த இடத்துக்கு அருகில் ஓர் ஆலயம் கட்டும்படியும் அவ்விடத்தில் உருவான நீரூற்றில் இருந்து பெனடேற்றை பருகும்படியும் கூறினார். இன்று லூட்ஸ் ஆனது பிரபல்யம் பெற்ற யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. காரணம் யாதெனில் அமல உற்பவ தாயாகிய அன்னை மரியாளின் வேண்டுதல் ஊடாக இங்கு நாடி வருபவர்களுக்கு புதுமைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதனாலாகும்.

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள கெபியானது "நாமே அமல உற்பவம்" என்ற வார்த்தைகளை இங்குள்ள அன்னை மரியின் சொரூபத்தின் மேலாக பொறிக்கப்பட்டு 1936ம் ஆண்டு குழந்தை பாக்கியத்துக்காக லூர்து அன்னையிடம் செய்த வேண்டுதல் கிடைத்தன் நன்றியின் வடிவமாக அன்னைக்கு தம் நன்றியை காணிக்கையாக்க திரு.திருமதி. வரப்பிரகாசம் இம்மானுவேல் தம்பதியினரால் கட்டப்பட்டது ஆகும்.

இதன் வரலாறு என்னவென்றால் திரு.இம்மானுவேலும் அவரது மனைவி சவிரியாக்சியும் 10 வருடங்களாக தமது திருமண வாழ்வில் குழந்தை இல்லாமல் துன்புற்றனர். இதனால் இவர்கள் மனமுடைந்து குழந்தை கிடைக்குமோ என நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர்.

இவர்களின் நிலையை கண்ணுற்ற அப்போதைய பங்குத்தந்தை அருட்பணி ஆசிர்வாதம் அமதி அடிகளார் லூர்து அன்னையை நோக்கி குழந்தை பாக்கியத்துக்காக மன்றாடி அவள் பெயரை மகிமைப்படுத்துவதாக வாக்களித்து செபிக்கும்படி இவர்களை கேட்டுக்கொண்டார். இதன் பிரகாரம் இவர்களது உறுதியான செபத்துக்கு பலனாக ஒரு பெண் குழந்தை இவர்களுக்கு பிறந்தது. அவர்களது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர்கள் அந்த குழந்தைக்கு லூட்ஸ் என பெயரிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை மரியின் தாய்க்குரிய அளவு கடந்த ஆறுதலளிக்கும் அன்பையும் பராமரிப்பையும், கடவுளின் இரக்கத்தையும் எல்லா மக்களுக்கும் உணர்த்தும் வகையிலும் தமது காணிக்கையும், நன்றியையும் தெரிவிக்கும் முகமாகவும் ஓர் கெபியை கட்டுவதே சரியானது என அவர்கள் உணர்ந்தார்கள்.

அவர்களிடம் இந்த கெபியை அமைப்பதற்கான சரியான வரைப்படம் இருக்கவில்லை பங்கு குருவின் உதவியுடன் அவர்கள் ஒரு இந்து மேசனை யாழ்ப்பானத்தில் இருந்து கொண்டு வந்து அவருக்கு எவ்வாறு இந்த கெபி அமைக்கப்பட வேண்டும் என தெளிவுப்படுத்தி எமது அன்னையின் கெபி அமைக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் கொழும்பில் "செல்" கூட்டுத்ததாபனத்தின் கடல் சார்ந்தவற்றுக்கு பொறுப்பதிகாரியாக இருந்த திரு.இம்மானுவேல் தவறாது ஊர்காவற்றுறைக்கு வந்து இந்த விழாவை கொண்டாடுவார். இந்த விழாவை கொண்டாடுவதற்கு எமது எல்லா உறவினரும் ஆலயத்தைச் சேர்ந்த மூத்தவர்களும் குறிப்பாக, அந்தோனிசாமி, ஆசைமுத்து, நச்சேஸ்திரம், உடையார் ராசம் மற்றும் இளைஞர்களும் தமது கரம் கொடுத்து இவ் விழா அர்த்தமுள்ளதாகவும், விசேசமானதாகவும் அமைய ஒத்துழைப்பார்கள்.

திருமதி. சவிரியாச்சியின் தம்பியும், ஊர்காவற்றுறை விதானைமையுமான திரு.அந்தோனிமுத்து எப்போதும் கெபியின் முன்றலை மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொண்டு ஒளியூட்டுவார். அந்த காலத்தில் மின்சாரம் இல்லாத காலமாக இப்குதி விளங்கியது. இப்பகுதியின் இளையவர்கள் மிகவும் துடிப்புடன் கலாச்சாரத்துக்கு ஏற்ற முறையில் இக் கெபியை அலங்கரிக்க குறிப்பாக தென்னம் குருத்து ஓலைகள், தேங்காய் குலைகள், வாழை மரத்துடன் வாழைக்குழைகள், காட்டு தளைமரங்கள், அதன் கிளைகள், மற்றும் சிவப்பு, நிறத்திலான அதன் பழங்களுடன் கொண்டு வந்து அலங்கரிப்பர். மேலும் மலைநாட்டில் இருந்து இயற்கை மலர்களும் கொண்டு வந்து கெபி அழகாக அலங்கரிக்கப்பட்டு இருக்கும். ஆரம்ப காலத்தில் இத் திருவிழாவானது லூர்து அன்னையின் கொடி ஏற்றப்பட்டு ஆரம்பமாகி 7 நாட்கள் நோவினையும், ஒவ்வொரு நாளும் செபமாலை, லூர்து அன்னையின் புகழ்பா, ஆசீர்வாதம் என்பன நடைபெறும். இறுதியில் மூன்று குருக்கள் மாலை ஆராதனையை பாடுவர்.பின் அலங்கரிக்கப்பட்ட அன்னையின் சுரூபம் மக்கள் மெழுகுவர்த்திகளை ஏந்தி பவனியாக முன்செல்ல வெள்ளை உடையணிந்து இளம் பெண்கள் அன்னையின் சுரூபத்தை சுமந்து வருவர்.

அன்னையின் சுரூபத்தை தாங்கி செல்லும் அனேகமான இப்பெண்களுக்கு அடுத்த திருவிழாவுக்கு முன் அவர்களுக்கு திருமண பாக்கியம் வந்துவிடும் என்ற நம்பிக்கை இவர்களிடையே இருந்தது. அடுத்த நாள் ஞாயிறு அன்று தான் திருவிழா திருப்பலி நடைபெறும். ஊர்காவற்றுறையின் அருகில் உள்ள எல்லா பகுதிகளிலும் இருந்து மக்கள் இவ்விழாவில் கலந்து கொள்ள வருவர்.

திரு.திருமதி இம்மானுவேல் மேலும் இரண்டு பிள்ளைகளை பெற்று ஆசிர்வதிக்கப்பட்டார்கள். அவர்கள் முறையே ஓர் ஆண் மகனும் ஓர் மகளுமாவார். அவர்கள் ஒரு புது வீடு கட்டி அதற்கு "லூர்து அன்னையின் வீடு" (Case-De-Lourdes) என பெயரிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய மகள் தனது பாடசாலை கல்வியை கரம்பன் சிறிய புஸ்பம் மடத்தில் கற்று தேர்ந்து பின் உயர் கல்வியை இந்தியாவில் உள்ள திருச்சி புனித திருச்சிலுவை கல்லூரியில் கற்று விஞ்ஞான பிரிவில் தனது இயங்கலைமானிக்கப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவள் வீடு திரும்பிய பின் இவளும் இவளது தாயாரும் மடுமாதா ஆலயத்துக்கு யாத்திரை மேற்கொண்டு திரும்பும் வழியில் 1964ம் ஆண்டு ஐப்பசி மாதம் பயங்கர ரெயின் விபத்தில் சிக்குண்டு இருவரும் உயிர்நீத்தனர். திரு.இம்மனுவேல் இந்த இழப்பால் மனம் உடைந்தவராக இருந்தாலும் அதுவும் இறைவனின் திட்டம் என உணர்ந்து அதை ஏற்று பின் கொழும்பில் தனக்கு இறைவன் தந்த புதுமை மகளாகிய மூத்த மகள் அன்னா லூட்சுடன் வாழ்ந்து வந்தார். அன்னா லூட்ஸ் திரு பொன்ஜின் தம்பு அவர்களை மணம் முடித்தார். திரு.இம்மானுவேல் கொழும்பில் இருந்தும் தனது மகளுடைய குடும்பத்துடன் ஊர்காவற்றுறைக்கு சென்று அன்னையின் விழாவை வெகு சிறப்பாக கொண்டாடி வந்தார். அன்னா லூட்சுக்கு 5 குழந்தைகள் பிறந்தனர். அவர்களும் தமது பேரனான இம்மானுவேலை பின்பற்றி அவருடன் ஊர்காவற்றுறைக்கு இவ்விழாவுக்கு சென்று வந்தனர். திரு. திருமதி. பொன்ஜின், அன்னா லூட்சின் முதல் இரு பிள்ளைகளுக்கும் முறையே இமாக், கொண்செப்ரின் என அவர்கள் பெயரிட்டனர். தங்கள் மூத்த பேரப்பிள்ளைக்கு லூட்ரினா என்று பெயரிட்டனர். இம்மானுவேல் மறைந்த பின்னும் அவரது மகள் அன்னா லூட்சும் அவள் கணவர் பொன்ஜினும் தொடர்ந்து தங்கள் பிள்ளைகளை ஊர்காவற்றுறைக்கு கூட்டிச் சென்று கெபி திருநாளை கொண்டாடினர்.

பிள்ளைகள் வளர்ந்து தமது மேற்படிப்புக்காக அமெரிக்கா பயணமாகினர். எல்லா பிள்ளைகளும் மணமுடித்து 4 பேர் அமெரிக்காவில் தம் குடும்பத்துடன் குடியேறினர். ஒரு மகள் அதாவது கொண்செப்ரின் இன்று தனது கணவர் டப்லியுடனும் தனது பிள்ளைகளுடனும் கொழும்பில் வசித்து வருகிறார். தற்போது லூட்சும் பொன்ஜினும் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். பத்து பேரப்பிள்ளைகளை தந்து தம்மை ஆசீர்வதித்தமைக்காக இவர்கள் மீண்டும் அன்னை மரிக்கு நன்றி கூறி நிற்கின்றார்கள். திரு.திருமதி.பொன்ஜின், லூட்ஸ் தமது 50 ஆவது திருமணவிழாவை 2008ம் ஆண்டு கொண்டாடி அதன் ஞாபகமாக பிரான்ஸ் நாட்டின் லூர்து பதிக்கு சென்று அதன் 150 ஆவது ஆண்டின் நிறைவில் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள லூர்து கெபியானது அங்குள்ள மக்களின் வாழ்வின் ஓர் பகுதியாக உள்ளது. பலர் லூர்து அன்னையின் பெயரை தங்கள் பிள்ளைகளுக்கு பெயராக சூட்டியது மட்டுமல்ல அவளிடம் தமது உடல், உள ஆன்மீக தேவைகளுக்காகவும் மன்றாடுகின்றார்கள். லூர்து அன்னையின் செய்தியானது நேற்று, இன்று மட்டுமல்ல என்றென்றைக்கும் எம் எல்லோருக்கும் உரியதாகும்.

லூர்து அன்னையின் தனது வல்லமைமிக்க பரிந்துரையால் அவளது உதவியை நாடும் எல்லோருக்கும் குறிப்பாக அன்பையும், சமாதானத்தையும் குணமளித்தலையும் அருள்வாளாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கன்னி மரியாளை அன்பு செய்து அவளது பராமரிப்புக்காக மன்றாடுங்கள் என பெனடேற் 1873ம் ஆண்டு வைகாசி மாதம் 12ம் திகதி கூறியது போல எமது அன்பான தாயாகிய லூர்து அன்னையே உமது அளவு கடந்த ஆசீகளை தொடர்ந்தும் எனது சகோதரனான ஆயருக்கும், எனது குடும்பத்துக்கும், பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் வழங்கியதற்காக உமக்கு நன்றியம்மா. என்னை உமது 75 வருட நிறைவு விழாவில் கலந்து கொள்ள இன்றும் உயிரோடு வைத்துள்ள தயவுக்காகவும் உமக்கு நன்றி தாயே.

தகவல்

திருமதி அன்னா லூட்ஸ் தம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reminiscence

*There lived a noble Family in the vicinity of St'Anthony's church Kayts.they were a very devoted catholic family. Although they were blessed with worldly goods they were breft of children. The head of the family being an ardent devotee of our lady of Lourdes made a personal vow to our lady that he would build a shrine to Our lady if she would bless them with a child.*

*Our Lady listening to his humble prayer blessed him with a daughter. In thanksgiving he built a very beautiful grotto in the premises of St. Anthony's church Kayts. The foundation of the grotto was laid by Very Rev. Fr. Asirwatham OMI on 13th June 1935. The grotto was blessed and opened for worship the following year. Thus the 75th anniversary is this year.*

*The benefactors were the late S.Emmanual Varapragasam and his wife Saveriarchi incidentally they are the parents of His lordship Rt. Rev. Dr. Savundaranayagam the Present bishop of Jaffna. It may be of interest to know the 1st child born to them in answer to their prayer was named Anna Lourdes.*

*I the Writer of the forgoing was a lad of fifteen when the foundation was laid and was present there when it was completed and blessed. My Beloved Friend the late J. Antonipillai and I was always eager to help out at the celebration of the feast of Lourdes I thank God Almighty for blessing me and keeping me well to witness the 75th year of jubilation.*

*S. Anfonipillai*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lourdes Feast
## By Indra Thampoe-Savundararaj

*Every year, my whole family traveled from Colombo to Kayts to celebrate the Lourdes feast day in February. My Dad took time off from work and my parents took all five of us out of school and we all went to Kayts to celebrate the feast day. As a kid, I thought the Lourdes feast day was only celebrated in our grand parents' parish church in Kayts. I did not understand why we had to go all the way up to Kayts from Colombo to celebrate the feast day, especially when we had so many catholic churches (& grottos) where I grew up. I showed no interest in finding out why either because I just loved my trips up north, so I did not want to do anything to jeopardize it. We all looked forward to our annual trip up north for various reasons. I was just excited to have time off from school, was excited about taking the overnight train to Jaffna and was thrilled about having the total freedom to play outdoors in Kayts without too many restrictions that is normally placed upon us in Colombo. I learned to ride my bike there and I cannot imagine my life without it because it has become one of my favorite activities. While we kids, focused on playing and enjoying the outdoors, my parents and other adults in the community focused on the feast day celebrations. The festivities started on Saturday evening with the statute of our Lady of Lourdes being carried in a procession through the main streets of Kayts. The statue was carried by young unmarried girls from our community, all wearing white. The following day, mass was celebrated in honor of our Lady of Lourdes. I was blessed to have gotten the opportunity to carry the statute myself in 1984, the year before I left Sri Lanka.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



In Lourdes

*As I started to reach my pre-teen and teenage years, I started to understand a little bit more about the significance of the feast day and the importance of it to our family. I can't help but think that if my grand parents did not have their strong faith and persevere in their prayers, my mom would not have been born and therefore I would not have been either. Also, I started to understand that this day was not only an important feast day for my family but for the whole community in Kayts.*

*As an adult, as I look back at my childhood and all the fond memories of our annual trip to Kayts, I realize how fortunate I am to be part of this family of faith and part of a united community such as ours. I learned some of life's important life lessons during these trips. These trips taught me about having strong faith, to never give up hope and to persevere no matter what life throws at you. Now, as part of the Sri Lankan Diaspora living far away from our homeland, I have started to appreciate the simplicity of our people and the community spirit they showed towards one another. They were there to celebrate the joys of life, as well to help with the challenges one faced. No one ever felt alone or lonely in a community such as ours. Religion, faith and family were major part of our community. They prayed hard, worked hard and celebrated life. So looking back, this feast day is not only about honoring the feast day of our Lady of Lourdes but also about the strong faith of my grandparents and of our community. This is also a day of hope, faith and perseverance.*

*May God bless you all.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "PRAYER AND PENITENCE"



**Praying at the Grotto**

*The Silent, private joy of personal prayer that Bernadette experienced during the first apparitions is today shared by the millions of believers who come to pray at the Grotto. The Grotto is the true heart of the Lourdes shrine. The First morning Masses are said there one after the other in every tongue. The ceremony of blessing the children takes place there twice a week. And community prayers for the sick are said there.*

*The Marian Procession assembles, and at the end of the evening a last mass is performed. Fervent pilgrims continue to touch and embrace the cold, damp sides of the grotto where Our Lady appeared to Bernadette.*

*The course of the River Grave, which once joined the Savy millstream near the Grotto, has been diverted twice to create a wide forecourt covering an area of twenty-seven square meters. Two paving stones mark the original course of the millstream and the place where Bernadette stood the day of the first apparition. Here, pilgrims bow their heads in silent prayer before the statue of Our Lady, placed on the exact spot where she habitually appeared, in the recess on the right-hand side of the Grotto. At the foot of the statue is a burning bush of candles. Since 1858, following Bernadette's example, the faithful have come to the Grotto bearing candles, the symbol of their faith in Christ, who, in the Gospels, declares, "I am the Light of the world". Inside the Grotto, to the right, a rosebush planted in the rock is a reminder of the "sign" required by the Farther Peyramale, who said, "And have her make the rose bush in the grotto blossom". To the left of the alter, visible beneath a pane of glass, is the spring discovered by Bernadette on February 25th, 1858. Harnessed and channeled, its waters are used to supply the nearby drinking fountains and baths.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Basilica of Lourdes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org